www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/02**

Paper 2 Reading and Writing **October/November 2010**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண் உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம், ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **6** printed pages and **2** blank pages.

DC (NH/AR) 32050
© UCLES 2010
UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

www.PapaCambridge.com

பகுதி – 1

முதலில் கீழே தரப்பெற்றுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்

உலகம் வேகமாக மாறி வருகிறது.எல்லோருடைய வீட்டிலும் கணிணி எனப்படும் கம்ப்யூட்டரும் கைத் தொலைபேசி அல்லது அலைபேசி எனப்படும் மொபைல் போனும் இருக்கின்றன .இவ்விரண்டு கருவிகளும் நம் வாழ்க்கையை மிகவும் மாற்றிவிட்டன. இன்னும் என்னென்ன மாறுதல்கள் வரும் என்பதை யாரும் உறுதியாகச் சொல்ல முடியாது. முதலில் கம்ப்யூட்டரைப் பார்ப்போம். இதில் பெரும்பாலோர் வீடுகளில் 'இன்டர்னெட்' எனப்படும் இணைய தொடர்பு இருக்கிறது.இது நம் வாழ்க்கையை எவ்வளவு மாற்றிவிட்டது என்று எண்ணிப் பார்த்தால் வியப்பாக இருக்கும்.

இணையத் தொடர்பு உள்ளவர்கள் எழுதுவதையே விட்டுவிட்டார்கள். எழுதுவதற்குப் பதிலாக எல்லாவற்றையும் மின் அஞ்சல் எனப்படும் ஈ மெயில் மூலமாகவே பரிமாறிக்கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் தன் சொந்த மொழியிலேயே எழுதிக் கொள்ள அந்தந்த மொழி எழுத்துக்களும் கிடைக்கின்றன. இதனால் கடிதம் எழுதும் பழக்கமும் கடிதம் எழுதும் கலையும் அழிந்துவருகிறது .காகிதச் செலவும் தபால் செலவும் மிச்சமாவது உண்மைதான் உலகின் எந்தப் பகுதிக்கும் ஒரே நிமிடத்தில் நம் ஈ மெயில் கடிதமும் போய்ச் சேர்ந்துவிடுகிறது. ஆனால் இதில் சில நஷ்டங்களும் இருக்கின்றன. ஈ மெயில் கடிதங்களில் மரியாதையோ மனித நேயமோ அதிகம் இருப்பதில்லை.

கையினால் எழுதிய கடிதமாக இருந்தால் அதை நினைவுப் பொருளாகப் பாதுகாக்கமுடியும். எடுத்துக் காட்டாக ஒருவருடைய உறவினரோ நண்பரோ இறந்த பின்னாலும் அவருடைய கடிதத்தை நாம் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறோம்.ஏன் எனில் அதில் அவருடைய அழகான கையெழுத்து இருக்கிறது. ஆனால் அவரே இணையத்தில் எழுதி இருந்தால் அது வெறும் எழுத்தாகவே மட்டும் இருக்கும். இப்போதெல்லாம் பத்திரிகைகளைப் படிக்கும்போது புகழ் பெற்றோரின் பழைய கால கடிதங்களுக்கு ஏலத்தில் இலட்சக் கணக்கில் பணம் கிடைப்பதைப் பார்க்கிறோம். ஆனால் எதிர் காலத்தில் கடிதங்களே இருக்காதே!

இணையம் இருப்பதால் பல நன்மைகளும் இருக்கின்றன. பலரும் வீட்டிலிருந்தே வேலை செய்கிறார்கள். அலுவலக வேலைகளை வீட்டிலிருந்தே செய்வதால் ஆற அமர சமையல் செய்யலாம். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளலாம். இதனால் போக்குவரத்துச் செலவும் நெரிசலும் குறைகிறது. பள்ளிக்கூட, பல்கலைக் கழக மாணவர்களுக்கு இது பெரிய வரப் பிரசாதமாக அமைந்துவிட்டது. வீட்டுப் பாடங்களையும் தேர்வுக்கான பயிற்சிகளையும் வீட்டில் கம்ப்யூட்டரில் செய்து அப்படியே ஆசிரியருக்கு அனுப்பிவிடலாம். இலண்டன் போன்ற நகரங்களில் பல பள்ளிக்கூடங்கள் இதை அனுமதிக்கின்றன .யார் அறிவார்? எதிர் காலத்தில் தேர்வுகளைக் கூட வீட்டிலிருந்தே எழுத அனுமதிப்பார்கள்!

www.PapaCambridge.com

மின் அஞ்சலை விடுங்கள். இணைய தளத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இனி புத்தகமோ அகராதியோ கலைக்களஞ்சியமோ வாங்கவேண்டிய அவசியமே இல்லை. எல்லாம் இணைய தளத்திலேயே கிடைக்கின்றன. 'கூகுல்' போன்ற அமைப்புகள் ஒரு சில வினாடியில் நமக்கு வேண்டிய விஷயத்தைக் கொடுத்துவிடுகிறது. இது மட்டுமல்ல. நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப் பட்ட பல பிரபல ஆசிரியர்களின் புத்தகங்களையும் இலவசமாக படிக்கலாம். ஏனெனில் அவைகளுக்கு பதிப்புரிமை (காப்பிரைட்) கிடையாது. இணையதளத்தில் உள்ள ஒரு குறைபாடு-மாணவர்கள் வேண்டாத விஷயங்களில் நேரத்தை வீணடிப்பதாகும்.மணிக்கணக்கில் கணிணி முன்னால் உட்கார்ந்துகொண்டு விளையாட்டுகள் ஆடுவது அல்லது தேவையற்ற விஷயங்களைப் பார்ப்பது ஆகியனவற்றைப் பெற்றோர்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

இப்போதெல்லாம் புத்தகங்களை அச்சிடுவதற்குப் பதிலாக இணைய தளத்திலேயே வெளியிடுகிறார்கள். இதனால் காகிதமும் அச்சிடும் மையும் நேரமும் செலவும் மிச்சமாகும். ஆனால் சிலருக்கு இந்த முன்னேற்றமெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை.அவர்கள் புதிய மாற்றங்களை எதிர்க்கிறார்கள்.எங்களுக்கு இதெல்லாம் தேவையில்லை. பழைய முறையே எங்களுக்கு உகந்தது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். பலரும் புதிய விஷயங்களைக் கற்கத் தயாராக இல்லை. அவர்கள் புதிய மாறுதல்களை ஏற்கத் தவறினால் பின்தங்கிவிடுவார்கள். அவர்கள் சொந்தக்காரர்களைத் தொடர்புகொள்ள இணையத்தைப் பயன்படுத்தும் போதுதான் அதன் அருமை பெருமையை உணர்கிறார்கள். இப்பொழுது கடையில் பொருள்களை வாங்குவது கூட இணையம் மூலம் நடக்கத் துவங்கி விட்டது.

**1** கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்திகளிலிருந்து எடுத்து எழுதுக.

(எ.கா) புகை வண்டி ஓடும் பாதை- தண்டவாளம்

**(a)** ஆச்சரியமாக [1]

**(b)** நசித்துவருகிறது [1]

**(c)** இழப்புகள் [1]

**(d)** குறைகூறுகிறார்கள் [1]

**(e)** நூல்கள் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

www.PapaCambridge.com

**2** கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

(எ.கா) அன்பு
விடை- குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்

**(a)** மாறுதல் [1]

**(b)** மின் அஞ்சல் [1]

**(c)** கடிதம் எழுதும் கலை [1]

**(d)** புகழ்பெற்ற [1]

**(e)** அச்சிடுதல் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**3** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து அப்படியே சொற்களையோ வாக்கியங்களையோ எடுத்தெழுதாது விடைகளைத் தருக.

**(a)** என்ன என்ன விஷயங்கள் மனிதனின் வாழ்க்கையை மாற்றியுள்ளன? [2]

**(b)** கடிதம் எழுதும் கலைக்கு என்ன நேர்ந்தது?ஏன்? [3]

**(c)** எழுதப்படும் கடிதங்களுக்கு நீண்ட காலம் மதிப்பு இருப்பது ஏன்? [2]

**(d)** இன்டர்னெட் ஏன் ஒரு வரப்பிரசாதம் என்று கட்டுரையாளர் கருதுகிறார்? [2]

**(e)** இணையத்தால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் என்ன? மேலேயுள்ள பத்திகளிலிருந்து எடுத்து எழுதவும். [4]

**(f)** எல்லோருக்கும் இணையத்தொடர்பு எளிதாக இருக்கிறதா? [2]

[சிறந்த மொழித்திறனுக்கு 5 மதிப்பெண்கள்]
[மொத்தம் 20 மதிப்பெண்கள்]

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**TURN OVER FOR SECTION 2**

www.PapaCambridge.com

பகுதி – 2

கைத் தொலைபேசி இல்லாவிடில் கை கால் ஒடிந்த மாதிரிதான். இது நம் வாழ்க்கையில் இரண்டறப் பின்னிப் பிணைந்துவிட்டது. இதில் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு.பள்ளிக்கூட சிறுவர்கள் முதல் வயதான தாத்தா ,பாட்டி வரை எல்லோர் கைகளிலும் இது தவழ்கிறது.

பலரும் கைத் தொலைபேசியை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். சாலையைக் கடக்கும்போதும் கார்களை ஓட்டும் போதும் போனில் பேசுகிறார்கள். இது மிகவும் தவறு.அவர்களுடைய உயிர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்கள் உயிருக்கும் ஆபத்து.ஆனால் இது அந்தக் கருவியின் பிழை அன்று.கத்தி இருக்கிறது.அதை காய்கறிகளை வெட்டவும் பயன்படுத்தலாம். ஆட்களை வெட்டவும் பயன்படுத்தலாம். இதற்காக யாராவது கத்தியைக் குறை சொல்கிறார்களா?

கைத்தொலை பேசி இருப்பதால் சிறுவர் சிறுமியர்கள் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தார்களா என்று தாய்மார்கள் அறிய முடிகிறது. பயணம் செய்பவர்கள் உடனுக்குடன் அவர்களுடைய பயணம் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல முடிகிறது. செய்திகளை உடனுக்குடன் அறியவும் வசதிகள் இருக்கின்றன. ஆனால் என்ன செய்வது? கெட்ட மனிதர்கள்,குறிப்பாக பயங்கரவாதிகள், வெடிகுண்டுகளை வெடிக்கவும் கூட இதைப் பயன்படுத்துகிறார்கள்.

சிலர் ரயில்களிலும் பஸ்களிலும் உரத்த குரலில் கைத் தொலைபேசியில் பேசுவது மற்றவர்களுக்கு எரிச்சலைத் தருகிறது. அது மட்டுமா? சிலர் அந்தரங்க விஷயங்களையும் ரகசியங்களையும் கூட மற்றவர்கள் இருப்பதை மறந்து பேசுகிறார்கள். இவர்களை என்ன சொல்வது?

ஆசிரியர்களுக்கும் மொழி அறிஞர்களுக்கும் கைத் தொலைபேசி பெரிய சவாலை விடுக்கிறது.ஆங்கில மொழி உருக்குலைந்து வருகிறது. அண்மையில் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியானது. மாணவர்கள் தேர்வுகளில் கூட 'எஸ் எம் எஸ்' ஸில் பயன்படுத்தும் 'டெக்ஸ்ட்' மொழியைப் பயன்படுத்தத் துவங்கிவிட்டார்கள்.இதனால் அவர்களுக்கு சரியான 'ஸ்பெல்லிங்' மறந்துவிடுகிறது. ஆனால் மற்றொரு பேராசிரியரோ இந்த மாற்றத்தில் தவறு ஏதும் இல்லை. உலகில் உள்ள எல்லாம் மாறிவருகிறது.மாற்றம் என்பது எல்லா துறையிலும் உண்டு.இதை யாரும் தடுக்க முடியாது என்கிறார். உண்மைதான். திருவள்ளுவர் எழுதிய தமிழோ, சார்ல்ஸ் லாம்ப் எழுதிய ஆங்கிலமோ இன்று இருக்கிறதா?

கைத் தொலைபேசி பற்றி பல வியப்பான செய்திகளும் வெளியாகி வருகின்றன. எதிர்காலத்தில் நம்முடைய க்ரெடிட் கார்ட் (கடன் அட்டை), பஸ்/ரயில் பாஸ், பாட்டுகள், புகைப்படங்கள், பாதுகாக்க வேண்டிய அந்தரங்க விஷயங்கள், கேமெரா, ரேடியோ, வீடியோ எல்லாம் ஒரே கைத் தொலைபேசியில் அடங்கிவிடுமாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நம் சட்டைப் பைக்குள் உலகமே இருக்கும்!

www.PapaCambridge.com

கைத் தொலைபேசியைப் பயன்படுத்துவதால் உடல்நலத்துக்குக் கேடு விளையுமா என்று ஒரு சர்ச்சை நடந்துவருகிறது. இதைத் தலைக்கு அருகில் வைத்துப் பேசுவதால் மூளைக்கு ஏதேனும் ஆபத்து வருமா என்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதே போல இந்த அலைவரிசையைப் பரப்ப எழுப்பும் கோபுரங்களின் அருகில் வசிக்கும் மக்களுக்கு ஏதேனும் ஆபத்து உண்டா என்றும் ஆய்வுகள் நடந்தன. ஆனால் இதுவரை வெளியான முடிவுகள் எந்த ஆபத்தையும் உறுதிப் படுத்தவில்லை.

**4** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து அப்படியே சொற்களையோ வாக்கியங்களையோ எடுத்தெழுதாது விடைகளைத் தருக.

**(a)** கைத் தொலைபேசி இல்லாவிடில் கை கால் ஒடிந்த மாதிரிதான் என்று கட்டுரையாளர் ஏன் கூறுகிறார்? [3]

**(b)** கைத்தொலைபேசியைப் பயன்படுதுவதைக் கட்டுரையாளர் ஏன் கத்தியோடு ஒப்பிடுகிறார்? [3]

**(c)** நவீன கருவிகளால் மொழியில் ஏற்படும் மாற்றங்கள் என்ன? [3]

**(d)** நம் சட்டைப் பைக்குள் உலகமே இருக்கும் என்று கட்டுரையாளர் கூறுவதன் கருத்து என்ன? [3]

**(e)** கைத்தொலை பேசியைப் பயன்படுதுவதால் உடல்நலம் கெடுமா? [3]

[சிறந்த மொழித்திறனுக்கு 5 மதிப்பெண்கள்]
[மொத்தம் 20 மதிப்பெண்கள்]

**5** பின்வரும் வினாக்களுக்கு **140** சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

**(a)** இணையத்தாலும் , கைத் தொலைபேசியினாலும் நம் வாழ்க்கையில் என்ன என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? [10]

**(b)** நீங்கள் மாற்றங்களை வரவேற்கிறீர்களா இல்லையா? சில எடுத்துக் காட்டுகளைக் கூறி விளக்குங்கள். [5]

[சிறந்த மொழித்திறனுக்கு 5 மதிப்பெண்கள்]
[மொத்தம் 20 மதிப்பெண்கள்]

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of